


பொது இடத்தில் போதைப்பொருள் பயன்படுத்தி வீடியோ வெளியிட்ட த.வெ.க. அமைச்சர் சரத்குமாரை பதவி நீக்கம் செய்ய வலியுறுத்தி தலைமை கழக அறிவிப்பின்படி கோவை தெற்கு வட்டாட்சியர் அலுவலகம் முன்பு கோவை மாநகர் மாவட்டப் பொறுப்பாளர் துரை.செந்தமிழ்ச் செல்வன் தலைமையில் மாநகராட்சி மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன், கோவை நாடாளுமன்ற உறுப்பினர், முனைவர் கணபதி ப.ராஜ்குமார், மாவட்ட துணைச் செயலாளர்கள் கோட்டை அப்பாஸ், கல்பனா செந்தில் முன்னிலையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட வழக்கறிஞர்கள் ராஜேந்திரன், கணேஷ்குமார், அணி அமைப்பாளர்கள் அன்புசெழியன், தனபால், பாபு உள்பட 300 க்கும் மேற்பட்ட கழக நிர்வாகிகள் கைது செய்யப்பட்டனர்.

### ஆளுங்கட்சியின் ஆள் பிடிக்கும் அரசியல்!

# திணிக்கப்படும் இடைத்தேர்தல்கள் மூலம் - த.வெ.க. ஆட்சிக்கு மக்கள் தக்க பாடம் புகட்டுவார்கள்!

## சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் வலைதளப்பதிவு!

**சென்னை, ஜூலை 1-**

**சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள சமூக வலைதளப்பதிவில், "தமிழ்நாட்டில் திணிக்கப்படும் இடைத்தேர்தல்கள் மூலம் மக்கள் த.வெ.க. ஆட்சிக்குத் தக்க பாடம் புகட்டுவார்கள்!" என்று குறிப்பிட்டுள்ளார்.**

அவரது சமூக வலைதளப்பதிவு வருமாறு:-

மற்றொரு நாள். மற்றுமொரு ராஜினாமா.

இந்த Sofa Model ஆட்சி அமைந்த பிறகு, அ.தி.மு.க.வின் எம்.ஆர்.விஜயபாஸ்கர் 6ஆவது எம்.எல்.ஏ.வாக இன்று பதவியை ராஜினாமா செய்திருக்கிறார்.

ஆளுங்கட்சியின் ஆள் பிடிக்கும் அரசியல் எந்த அளவுக்கு extreme ஆகியுள்ளது என்பதையே இது காட்டுகிறது.

ஆட்சி அமைக்க ஆதரவு அளித்த கட்சிகளின் மீது நம்பிக்கையின்றி, நிறுத்தாமல் MLAக்கள் purchaseஐ தொடருவது, மக்களுக்கு இழைக்கின்ற மாபெரும் துரோகம்.

"தொட மாட்டேன் தொட்டா விட மாட்டேன்" என்று scriptபடி பொங்கிய முதலமைச்சர், அடுத்த sceneல், சொத்துக்குவிப்பு வழக்கில் சிக்கியவரை தன் கட்சியில் சேர்க்க முயல்வது ஏன்?

#SofaModel அரசின் இந்த Washing Machine அரசியலை தமிழ்நாடு பார்த்துக் கொண்டு தான் இருக்கிறது.

திணிக்கப்படும் இடைத்தேர்தல்கள் மூலம் மக்கள் தக்க பாடம் புகட்டுவார்கள்.

இவ்வாறு அப்பதிவில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

### கச்சா எண்ணெய் விலை குறைந்த நிலையில்

# பெட்ரோல், டீசல் விலையை உடனே குறைக்க ஒன்றிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்!

## கொ.ம.தே.க. ஈ.ஆர்.ஈஸ்வரன் வலியுறுத்தல்!



*நாமக்கல், ஜூலை 1-*

கச்சா எண்ணெய் விலை குறைந்த நிலையில் பெட்ரோல், டீசல் விலையை உடனே குறைக்க ஒன்றிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சி பொதுச்செயலாளர் ஈ.ஆர்.ஈஸ்வரன் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், மேற்கு ஆசியாவில் போர் சூழ்நிலை காரணமாக கச்சா எண்ணெய் விலை ஒரு பீப்பாய் 138 அமெரிக்க டாலராக இருந்தது. அப்போது தலைநகர் டெல்லியில் பெட்ரோல் லிட்டருக்கு 94.77 ரூபாயாகவும், டீசல் லிட்டருக்கு 87.67 ரூபாயாகவும் இருந்தது. இப்போது கச்சா எண்ணெய் விலை ஒரு பீப்பாய்க்கு 70.71 அமெரிக்க டாலராக குறைந்துள்ளது.

இவ்வாறு இருக்கும் நிலையில் இன்று தலைநகர் டெல்லியில் பெட்ரோல் லிட்டருக்கு 102.12 ரூபாய்க்கும், டீசல் லிட்டருக்கு 95 20 ரூபாய்க்கும் விற்கிறது. இது மட்டுமின்றி பெட்ரோல், டீசல் விலை உயர்ந்த போது வணிக பயன்பாட்டிற்கான எல்பிஜி சிலிண்டர் விலை இரண்டரை மடங்குக்கு மேல் உயர்ந்தது.

இப்போது நிலைமை சீரான நிலையில் விலை குறைப்பு பற்றி எவ்வித அறிவிப்பும் இல்லாதது மக்களை பாதிப்புக்கு உள்ளாக்கி உள்ளது. எனவே மத்திய அரசு உடனடியாக தலையிட்டு பெட்ரோல், டீசல் விலையை குறைப்பதுடன் எல்பிஜி வணிகப் பயன்பாடு மற்றும் பொது மக்கள் பயன் படுத்தும் சிலிண்டர் விலையையும் உடனடியாக குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.

### மொழிப்போர்த் தியாகி – முன்னாள் ஒன்றியப் பெருந்தலைவர்

# இரா.தென்னவன் துணைவியார் பங்கையர்செல்வி மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!

*திருவாரூர், ஜூலை 1-*

மன்னார்குடி முன்னாள் ஒன்றிய பெருந்தலைவரும், மொழிப்போராட்ட தியாகியுமான இரா.தென்னவன் அவர்களின் துணைவியார் திருமதி. பங்கையர் செல்வி அவர்கள் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

மறைந்த திருமதி.பங்கையர்செல்வி மன்னார்குடி மத்திய ஒன்றிய செயலாளர் சித்தேரி சிவா அவர்களின் மூத்த சகோதரியும் , தலைமை பொதுக்குழு உறுப்பினர் இரா.



காஞ்சி துரை அவர்களின் தாயாருமாவார் .

அம்மையாரின் மறைவின் தகவல் அறிந்த கழக பொருளாளர் டி.ஆர்.பாலு, மாவட்ட செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ., முன்னாள் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா உள்ளிட்ட கழக நிர்வாகிகள் தங்கள் இரங்கலை தெரிவித்துள்ளனர். கழக நிர்வாகிகளும், கழக தோழர்களும் அம்மையாரின் உடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

மறைந்த திருமதி. பங்கையர் செல்வி அவர்களின் இறுதி ஊர்வலம் நேற்று (30.06.2026 - செவ்வாய்கிழமை) நண்பகல் 2.00 மணிக்கு அம்மையாரின் இல்லத்தில் இருந்து புறப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்டது.

### திமுக, கூட்டணியில் இருந்து வெளியேறிய ம.தி.மு.க.வினர் WHISTLE அடிங்கள் – VIBE செய்யுங்கள் – DANCE ஆடுங்கள்;

# தேவையில்லாமல் தி.மு.க.வை விமர்சனம் செய்யாதீர்கள்!

## ம.தி.மு.க.வுக்கு முன்னாள் அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் கண்டனம்!

*அரியலூர், ஜூலை 1-*

நேற்று முன்தினம் நடைபெற்ற மதிமுக பொதுக்குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி திமுக கூட்டணியில் இருந்து மதிமுக வெளியேறுவதாக அக்கட்சியின் பொதுச் செயலாளர் வைகோ செய்தியாளர்களிடம் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் திமுக குறித்து தேவையற்ற விமர்சனங்களை மதிமுகவினர் முன்வைத்து வருவதாகவும், அதற்கு பதில் சொல்ல வேண்டிய கட்டாயம் திமுகவிற்கு உள்ளது என்று கூறிய முன்னாள் அமைச்சரும், மாவட்ட கழக செயலாளர் எஸ்.எஸ்.சிவசங்கர் வீடியோ ஒன்றினை வெளியிட்டு மதிமுகவை கடுமையாக விமர்சித்துள்ளார்.

திமுக கூட்டணியிலிருந்து மதிமுக விலகியதற்கு, திமுகவினர் பெரும் மகிழ்ச்சியாக உள்



ளனர். யாரும் வருத்தப்படவில்லை இதில் பெரிய விமர்சனம் செய்யாது கடந்து செல்கிறோம். ஆனால், மதிமுக தரப்பிலிருந்து சிலர் விமர்சனங்களை முன்வைக்கும் போது, நாங்கள் பதில் சொல்ல வேண்டிய இடத்தில் இருக்கிறோம்.

ஏதோ திமுக தயவு இல்லாமல், தலைவர் கலைஞரின் தயவு இல்லாமல் வைகோ வளர்ந்தார் என சிலர் பேசுகின்ற செய்தியை மக்களுக்கு தெளிவு படுத்த வேண்டிய இடத்தில் நாங்கள் இருக்கிறோம். வைகோவின் வரலாறு தெரியாமல் மதிமுகவில் இருக்கின்ற சிலர் பேசலாம். ஆனால் திமுகவில் இருப்பவர்கள், மதிமுகவின் வரலாறு அறிந்தவர்கள். வைகோ நாடாளுமன்றத்தில் போய் கர்ஜித்த பிறகுதான் வைகோ என்ற அடையாளம் கிடைத்தது. ஆனால், அந்த நாடாளுமன்றத்திற்கு வைகோவை அனுப்பியது யார் எனில்? எங்கள் தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் தான்.

அதுவும் ஒருமுறை அல்ல, இருமுறை அல்ல, மூன்று முறை. நாடாளுமன்ற மேலவை உறுப்பினராக 1978-1990 என ஒவ்வொரு காலகட்டத்திலும் தொடர்ந்து அனுப்பி நாடாளுமன்றத்தில் வைகோ பேச தைரியத்தை கொடுத்தது திமுக. தைரியத்தை கொடுத்தது முத்தமிழறிஞர் கலைஞர். ஒரு கட்சியின் தலைவர் ஆதரவு இல்லையெனில் எந்த தொண்டரும் பேச முடியாது. அந்த தெம்போடு தான் வைகோ பேசி அந்த பெயரை பெற்றார்.

ஆனால், அதற்கு நன்றியாக அவர் மதிமுகவை ஆரம்பித்து, திமுகவை பிரித்தார். அதற்கான பலன்களை தொடர்ந்து, அவர்களே பார்த்துக் கொண்டுள்ளனர்.

அதிமுககூட்டணியிலே, பாஜக கூட்டணியிலே போட்டியிட்டு சிவகாசி தொகுதியிலே வெற்றி வாய்ப்பை இழந்த கதை எல்லாம் எல்லோருக்கும் தெரியும். சிவகாசி தொகுதியில் கலைஞரால்தான் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைப் பெற்றார்.

2019 மீண்டும் எங்களது கழக தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் தயவினால் தான் மேலவை உறுப்பினராக மீண்டும் அனுப்பப்பட்டார். எனவே 4 முறை திமுக எந்த சிறு சங்கடமும், தேர்தல் சிரமமும் இல்லாத அவரை நாடாளுமன்ற மேலவை உறுப்பினராக ஆக்கி அழகு பார்த்தது. இந்த பதவி எல்லாம் திமுக தயவால் தான் வைகோவுக்கு வந்தது.

மதிமுக என்று ஒன்றை ஆரம்பித்து 1996-ல் ஒட்டு மொத்தமாக 234 தொகுதிகளிலும் வெற்றி வாய்ப்பை இழந்ததே அவருக்கு கிடைத்த பரிசு. அவர்தான் ஆட்சியைப் பிடிக்கப் போகிறார் என பெரிய HYPE கொடுத்த காலகட்டத்தில், மீண்டும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் தான் முதலமைச்சரா னார்.

எனவே வைகோவின் வரலாற்றை பேசுவதற்கு முன்பு அனைத்தும் திமுகவினருக்கு தெரியும் என்பதை நினைத்து மதிமுகவினர் பேச வேண்டும். இன்னும் சொல்லப்போனால் வைகோவின் மிச்ச வரலாற்றை நாங்கள் சொல்வதை விட, மதிமுகவிலிருந்து வெளியே வந்துள்ள மூத்த தலைவர்கள் கேட்டாலே தெரியும். வைகோ பொடா வழக்கிலிருந்து விடுதலையாக போராடியவர், முத்தமிழறிஞர் கலைஞர். அந்த பொடா வழக்கில் வைகோவுடன் உடன் இருந்தவர் மரியாதைக்குரிய செவ்வந்தியப்பன், அழகுசுந்தரம், செங்குட்டுவன் அனைவரும் தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையில் இன்று தங்களை தி.மு.க.வில் இணைத்து கொண்டுள்ளனர்.

இவர்கள் தான் மதிமுகவின் தூண்களாக உடன் இருந்தவர்கள். அன்று மதிமுக துவங்கிய போது யார் இருந்தார்கள்? இன்று யார், யார் இருக்கிறார்கள்? என்று கணக்கு பார்த்தாலே தெரியும். இன்றைய மதிமுகவின் நிலை என்ன என்பது தெரியும்.

இதற்கு மேலும் பேசினால் வைகோவின் துவக்க காலத்தில் அந்த பயணத்தை துவங்கிய போது, தலைவர் கலைஞர் பேசுகிறபோது மேடையில் காலடியில் அவர் அமர்ந்திருந்த காட்சிகளை நேரடியாக பார்த்த சாட்சிகள் எல்லாம் உள்ளனர். அவர்களெல்லாம் பேச ஆரம்பித்தால், மதிமுகவின் மொத்த வரலாறும் முடிந்துவிடும். ஆகவே மதிமுகவினருக்கு அன்போடு சொல்லிக் கொள்கிறேன்.

போய் விட்டீர்கள் விஜய் படத்தை பார்த்து விட்டு "விசில்" அடிங்க, மகிழ்ச்சியா இருங்க, "VIBE" ஆகுங்க. அவர் படத்தில் வருகின்ற பாட்டை கேட்டு உயர்கல்வித்துறை அமைச்சர் காங்கிரஸ் விஸ்வநாதன் "DANCE" ஆடியது போல் நடனமாடி மகிழ்ச்சியாக இருங்கள். தேவை இன்றி திமுகவினரை விமர்சிப்பதை நிறுத்திக் கொள்ளுங்கள் என மதிமுகவினருக்கு எச்சரிக்கை விடுத்து முன்னாள் அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் வீடியோ வெளியிட்டுள்ளார்.

### திண்டிவனத்தில் த.வெ.க. அமைச்சரைக் கண்டித்து நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் – 500க்கும் மேற்பட்ட தி.மு.க.வினர் கைது!

திண்டிவனம், ஜூலை 1–

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. மாணவரணி சார்பில் திண்டிவனத்தில் த.வெ.க. அமைச்சரைக் கண்டித்து நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் உள்ளிட்ட 500க்கும் மேற்பட்ட தி.மு.க.வினரை போலீசார் கைது செய்தனர்.

பொதுவெளியில் த.வெ.க. அரசின் அமைச்சர் சரத்குமார் போதைப் பொருள் பயன்படுத்தியது தொடர்பான வீடியோ வெளியானதையும், இளைஞர்களை தவறான வழிக்கு எடுத்துச் செல்லும் அமைச்சர் சரத்குமார் பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி விழுப்புரம் வடக்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் திண்டிவனம் வ.உ.சி. திடலில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

விழுப்புரம் வடக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பிரசன்னா, துணை அமைப்பாளர்கள் சுபாஷ் சந்திர போஸ், ஞானசேகரன், லோகநாதன், மதியழகன், பிரதிவ், பெனாசிர் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் தலைமை தாங்கி கண்டன ஆர்ப்பாட்டத்தில் அமைச்சர் சரத்குமாரை கண்டித்து கோஷமிட்டார்.

மேலும் தமிழ்நாடு முதலமைச்சர் அமைச்சர் சரத்குமாரை உடனடியாக பதவியில் இருந்து நீக்க வேண்டும் என வலியுறுத்தி கண்டன கோஷமிட்டனர்.

மேலும் ஆர்ப்பாட்டத்திற்கு போலீசார் அனுமதி தராததால் திண்டிவனம் டி.எஸ்.பி.பிரகாஷ் தலைமையிலான நூற்றுக்கு மேற்பட்ட போலீசார் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் உள்ளிட்ட 500க்கும் மேற்பட்ட தி.மு.க. வினரை கைது செய்து திண்டிவனத்தில் உள்ள தனியார் மண்டபத்துக்கு கொண்டு சென்றனர்.

ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர், மாநில தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா, மாவட்ட துணைச் செயலாளர்கள் ரவிக்குமார், அமுதா ரவிக்குமார், செயற்குழு உறுப்பினர்கள் விஜயகுமார், நெடுஞ்செழி யன், சீனிராஜ், பொதுக்குழு உறுப்பினர் சாந்தி ஏழுமலை, ஒன்றியச் செயலாளர்கள், சொக்கலிங்கம், ராஜாராமன், தயாளன், பழனி, ரவிச்சந்திரன், அண்ணாதுரை, மொடையூர் துரை, மணிமாறன், செழியன், பச்சையப்பன், சாந்தி சுப்பிரமணியன், திண்டிவனம் நகரச் செயலாளர் ஆசிரியர் கண்ணன், செஞ்சி பேரூராட்சி மன்றத் தலைவர் மொக்தியார் அலி மஸ்தான், செஞ்சி நகரச் செயலாளர் கார்த்திக், முன்னாள் மாவட்ட துணைச் செயலாளர் அசோகன், நகர துணைச் செயலாளர் கௌதமன், முன்னாள் நகர துணைச் செயலாளர் அசோக் குமார் உள்ளிட்ட அனைத்து அணி அமைப்பாளர்கள், தி.மு.க. நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். திண்டிவனம் நகர மாணவரணி அமைப்பாளர் தமிழரசன் அனைவருக்கும் நன்றி கூறினார்.

# மைனா...




கல்விக்கூடத்தில்
"கை படாத
சீ.டி."க்கு

குத்தாட்டம்
போட்டவர்
கல்வி அமைச்சர்..

மக்கள் திரள்
அரங்கத்தில்

மாத்திரையை (?)
பொடி செய்த
மாமனிதர்

மனிதவள
மேம்பாட்டுத்துறை
அமைச்சர்...

புகை பிடிக்கும்
படத்தை
பச்சை குத்திக்
கொண்டவர்

மகளிர்
மேம்பாட்டுத்
துறை அமைச்சர்...

தமிழ் பேசத்
தெரியாத
தயாரிப்பாளர்

தமிழ்நாட்டின்
டெல்லி
தொடர்பாளர் .

ரூட்
"மாஃபியா"வின்
ஜெகதாள பிரதாபன்
முதல்வருக்கு
தனிச் செயலாளர்...

சபாஷ்...

உன்
நியமனங்களே
உன் நிர்வாகத்
திறமைக்கு
சாட்சி என்றால்..


உன் விரலில்
இருக்கும்
பச்சை மை
பேனா..

எஞ்சிய காலத்தில்
இன்னும்
என்னென்ன

கொடு"மை:க்கு
கெடு "மை"
ஆகுமோ..

**என்னநாஞ்
சொல்றது**

**மருது அழகுராஜ்**
*கழகச் செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்*





பொது இடத்தில் போதைப்பொருள் பயன் படுத்திய வீடியோ வெளியிட்ட த.வெ.க. அமைச்சர் சரத்குமாரை பதவி நீக்கம் செய்ய வலியுறுத்தி தலைமை கழக அறிவிப்பின்படி திருப்பூர் வடக்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் அனுப்பர்பாளையம் புதூர் பகுதியில் மாவட்டக் கழக பொறுப்பாளர், முன்னாள் மேயர் ந.தினேஷ்குமார் தலைமையில் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் கழகத்தினர் கண்டன முழக்கமிட்டனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை போலீசார் கைது செய்தனர். இதில் மாநில, மாவட்ட நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் பங்கேற்றனர்.